
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1029

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

148



`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

## ஏரோ-டெஃப்-கான் 25 ( AERO DEFCON 2025 ) மாநாடு!

### வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் தடம்

தமிழ்நாடு அனைத்து வகையான தொழில்களிலும், இந்திய அளவிலும், உலக அரங்கிலும் தடம் பதித்து வருகிறது. குறிப்பாக, உற்பத்தித் துறையில், இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக வளர்ந்து வருகிறது. தானியங்கி வாகன ஏற்றுமதி, இருசக்கர மின்வாகனங்கள் உற்பத்தி என புத்தொழில் துறைகளில் வலுவான இடத்தைப் பிடித்து வருகிறது. 2024–25-ஆம் ஆண்டில், 1,460 கோடி டாலர் மதிப்புடைய மின்னணுப் பொருட்களை, ஏற்றுமதி செய்து முதலிடம் பிடித்துள்ளது தமிழ்நாடு. காரணம், திராவிட மாடல் அரசு. கடந்த நான்கரை ஆண்டுகளில் தொழில்துறையில் உருவாக்கியுள்ள வாய்ப்புகளால், இந்தியாவிலேயே அதிகபட்சமாக இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டியுள்ளது தமிழ்நாடு.

புத்தொழில்களின் தொடர்ச்சியாக, வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறை சார்ந்த நிறுவனங்களை தமிழ்நாட்டுக்கு ஈர்க்கும் வகையில், திராவிட மாடல் அரசு நடத்திய மாநாடுதான் ஏரோ-டெஃப்-கான் 2025. (AERO DEFCON 2025).

இந்தியாவின் பாதுகாப்புத் தொழில்துறையில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு தாராளமயம் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தத் துறையின், எதிர்கால தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, அந்தத் துறையின் வளர்ச்சிக்கு என, முதல் மாநிலமாக 'தமிழ்நாடு பாதுகாப்புத் தொழிற்துறை வழித்தடத் திட்டம்' என்கிற சிறப்புத் திட்டத்தை உருவாக்கியது திராவிட மாடல் அரசு.

**எதிர்கால வாய்ப்புகள்**

அந்தத் திட்டத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில், 07.10.2025 அன்று சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், 'AERO DEFCON 2025' என்ற மூன்று நாள் சர்வதேச மாநாட்டை நடத்தியது திராவிட மாடல் அரசு. குறிப்பாக, தமிழ்நாடு அரசின் டிட்கோ நிறுவனம், பிரான்ஸின் BCI ஏரோஸ்பேஸ் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு ஏரோஸ்பேஸ் தொழில் வளர்ச்சிக் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து இந்த மாநாடு மற்றும் கண்காட்சி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன.

அக்டோபர் 7-ஆம் தேதி முதல் 9-ஆம் தேதி வரை நடைபெற்ற இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து, எதிர்கால இலக்குகள் குறித்து, சிறப்பான உரை நிகழ்த்தினார் முதலமைச்சர். குறிப்பாக 'தமிழ்நாடு பாதுகாப்புத் தொழிற்துறை வழித்தடத் தொலைநோக்குத் திட்டம்' மூலம் நடைபெற்று வரும் பணிகளை பட்டியலிட்ட முதலமைச்சர் அவர்கள், "வெறும் எண்ணமாக மட்டுமல்லாமல், பல முக்கியத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்ததன் மூலமாக, இந்தியாவின் பாதுகாப்புத் துறையில் எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் இடம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என பெருமையுடன் குறிப்பிட்டார்.

**சர்வதேச நிறுவனங்கள் இணைப்பு**

தமிழ்நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறை சூழலுடன், துறை சார்ந்த சர்வதேச நிறுவனங்களை இணைக்கும் முயற்சியாக இந்த மாநாடு விளங்கியது. குறிப்பாக, உயர்தர ஜெட் இயந்திர பாகங்களில் இருந்து, டிரோன்கள் உற்பத்தி வரை தமிழ்நாட்டில் நடைபெற இருக்கிறது. விண்வெளித் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தி நிறுவனங்கள் இங்கு முதலீடு செய்ய உள்ளன. இத்துறையில் சர்வதேச அளவில் கூட்டுத் திட்டங்கள், முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கிட வழி ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில்துறை வழித்தட திட்டம் செயல்படுத்தத் தொடங்கியதிலிருந்து இதுவரை 23 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, இதில் 5,000 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ளன. 2032-ஆம் ஆண்டிற்குள் 75 ஆயிரம் கோடி ரூபாய் இலக்கை அடைய தமிழ்நாடு முன்னேறி வருகிறது. அந்த இலக்கை எட்டுவதற்கு இந்த மாநாடு மற்றும் கண்காட்சி வழி ஏற்படுத்தியது.

> தமிழ்நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறை சூழலுடன், துறை சார்ந்த சர்வதேச நிறுவனங்களை இணைக்கும் முயற்சியாக இந்த மாநாடு விளங்கியது.

**தமிழ்நாடு துணை நிற்கும்!**

இம்மாநாட்டில் 19 நாடுகள் மற்றும் 300 நிறுவனங்கள் பங்கேற்றன. தொழில்துறை, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையே 5,000-க்கும் மேற்பட்ட வணிக சந்திப்புக் கூட்டங்களும் நடைபெற்றன.



இம்மாநாட்டின் கண்காட்சியில் BOEING, AIRBUS, LOCKHEED MARTIN, DASSAULT AVIATION, HAL, BEL, L&T DEFENCE, ROLLS-ROYCE, SAFRAN மற்றும் TATA ADVANCED SYSTEMS போன்ற முன்னணி நிறுவனங்கள் ஒன்றிய அரசு நிறுவனங்களான DRDO, ISRO, HAL, BDL, AVNL மற்றும் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் அரங்குகளை அமைத்திருந்தன. ஐ.ஐ.டி., சென்னை, எஸ்.ஆர்.எம்., அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் MADEIT INNOVATION FOUNDATION போன்ற கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களும் பங்கேற்றன.

தொடக்க விழாவில், உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள், வானூர்தி, விண்வெளி, கப்பல் உற்பத்தி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் புதுமைகள் நிறைந்த, ஏற்றுமதிக்கு உகந்த, தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்க, பாதுகாப்புத்துறையில் பணியாற்றும் நண்பர்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும் என உறுதி அளித்ததுடன், இந்தத் துறையில், இந்தியாவின் உற்பத்தி மையமாக தமிழ்நாடு மாற வேண்டும் என்று விரும்புகிறேன். இது, ஒரு புதிய காலத்தின் தொடக்கமாக அமையட்டும்! இந்தியாவின் பாதுகாப்பை மட்டுமல்ல, உலக அமைதி, வளம் மற்றும் முன்னேற்றத்தை இயக்கும் ஆற்றலாகவும் தமிழ்நாடு திகழட்டும்" என்றார். சொல் அல்ல; செயலே இயக்கம் என்பதை இந்த ஏரோ-டெஃப்-கான் 2025 மாநாடு சொல்லும்.

**...சாதனை தொடரும்**

## எப்ஸ்டீன் ஃபைல்ஸ் - அதிர்ச்சி தரும் இந்தியத் தொடர்புகள்!

அமெரிக்காவை உலுக்கிக் கொண்டிருக்கும் மிக முக்கிய விவகாரம் எப்ஸ்டீன் ஃபைல்ஸ் (Jeffrey Epstein) நிதியாளராக அறியப்பட்டு, பாலியல் குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டவர். சிறுமிகளைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டவர். அமெரிக்க அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் உள்பட உலக அளவில் பல பிரபலங்களும் அவருக்கு வாடிக்கையாளர்களாக இருந்துள்ளனர்.

2009-ஆம் ஆண்டு சிறையில் மர்மமான முறையில் மரணமடைந்த, அவரது ஆவணங்கள் அனைத்தையும் வெளியிட வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமீபத்தில், ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டது. சமீபத்தில் வெளியான சில ஆவணங்களில், இந்தியத் தொடர்புகள் குறித்து தெரிய வந்துள்ளது . பி.பி.சி., தி வயர் உள்ளிட்ட பல செய்தி நிறுவனங்கள் எழுதி இருக்கின்றன. இது குறித்து எழுத்தாளர் ஷாஜகான் முகநூலில் பதிவிட்டுள்ளார்.

"எப்ஸ்டீனுடன் இந்தியாவின் பெரிய கைகளுக்கும் தொடர்பு இருந்திருக்கிறது. முக்கியமான இரண்டு தொடர்புகள் இப்போது வெளி வந்திருக்கின்றன.

ஒன்று - அனில் அம்பானி.

ஆமாம். இப்போது திவால் நிலையில் இருக்கிற நிறுவனத்துக்கு, பல்லாயிரம் கோடி ரபேல் கான்டிராக்ட் பெற்ற அதே அனில் அம்பானிதான்.

மற்றொருவர் ஹர்தீப் சிங் பூரி. ஐ.எஃப்.எஸ். முடித்து வெளியுறவுத்துறையில் வேலை பார்த்து, 2014-இல் பா.ஜ.க.வில் சேர்ந்து, 2019-ஆம் ஆண்டிலிருந்து ஒன்றிய அமைச்சராக இருந்து வருகிறார்.

கேதரின் ரூய்ம்லர் என்பவர் ஒபாமா காலத்தில் வெள்ளை மாளிகையின் உதவித் தலைமை வக்கீல். இந்த கேதரின் ரூய்ம்லருக்கு எப்ஸ்டீன் ஒரு மெயில் அனுப்பியிருக்கிறான்.

அந்த மெயிலில், யார் யார் தன்னுடைய வாடிக்கையாளர்கள் என்று கோடிட்டு காட்டியிருக்கிறான்.

பைல்கள் வெளிவரவர, இன்னும் யார் யார் சிக்குவார்கள் என்று ஆவலாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றன உலக மீடியாக்கள். நமக்கு வாய்த்த அமைச்சர்கள் மிகமிகத் திறமைசாலிகள் - பலான விஷயங்களில்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





மு.வினோத்

**வாழ்நாள் மகிழ்ச்சி!**

2009-ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் பல்வேறு அரசு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அன்றைய கழகப் பொருளாளர் துணை முதலமைச்சர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்தார். எனக்குக் கிடைத்த வாய்ப்பில் தலைவரை சந்தித்து எடுத்துக் கொண்ட புகைப்படம். இந்தப் புகைப்படம் எனது வாழ்நாள் மகிழ்ச்சி.

**- மு.வினோத்,**
**மாவட்ட துணை அமைப்பாளர்,**
**தகவல் தொழில்நுட்ப அணி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

**அந்தக் கணக்கு தவறு!**

1962-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது, 50 இடங்களில் வெற்றி பெற்ற கழகம், 32 லட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தது. பேரறிஞர் அண்ணா, காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். "என் தோல்விதான் அவர்களுக்கு இன்னும் சில காலத்துக்கு ஆதிக்கம் செலுத்தலாம் என நம்பிக்கை அளிக்கும். ஆனால், அவர்களின் கணக்கு தவறு" என அந்தத் தோல்வியைக் குறிப்பிட்டார் அண்ணா.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.